செ.வெ.எண்: 31/ ஆகஸ்ட் /2020 நாள்: 15.08.2020

**திருச்சிராப்பள்ளி ஆயுதப்படை மைதானத்தில் 74வது சுதந்திர தின விழாவில் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சு.சிவராசு,இ.ஆ.ப., அவர்கள் இன்று(15.08.2020) தேசியக் கொடியை ஏற்றி வைத்தார்.**

**திருச்சிராப்பள்ளியில் நடைபெற்ற சுதந்திர தின விழாவில் கொரோனா நோய் தொற்று தடுப்புப் பணிகளில் சிறப்பாக பணிபுரிந்த மருத்தவர்கள், செவிலியர்கள், துப்புரவு பணியாளர்கள், 108 அவசர கால ஊர்தி பணியாளர்கள், மாவட்ட சித்த மருத்துவ அலுவலகத்தில் சிறப்பாக பணிபுரிந்த பணியாளர்கள் என மொத்தம் 98 நபர்களுக்கு பாராட்டுச் சான்றிதழ்களை மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சு.சிவராசு,இ.ஆ.ப., அவர்கள் வழங்கினார்.**

-------------------

திருச்சிராப்பள்ளியில் நடைபெற்ற சுதந்திர தினவிழாவில் கொரோனா நோய் தொற்று தடுப்புப் பணிகளில் சிறப்பாக பணிபுரிந்த சுகாதாரத் துறையை சார்ந்த 98 நபர்களுக்கு பாராட்டுச் சான்றிதழ்களை மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சு.சிவராசு,இ.ஆ.ப., அவர்கள் இன்று (15.08.2020) வழங்கினார்.

திருச்சிராப்பள்ளி மாவட்ட ஆயுதப்படை மைதானத்தில் மாவட்ட நிர்வாகத்தின் சார்பில் நடைபெற்ற சுதந்திர தின விழாவில் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சு.சிவராசு,இ.ஆ.ப., அவர்கள் இன்று (15.08.2020) காலை 8.50 மணிக்கு தேசியக் கொடியை ஏற்றி வைத்து வண்ணப் பலூன்களை பறக்கவிட்டார்கள். இதனைத் தொடர்ந்து திறந்தவெளி ஜீப்பில் சென்று காவல்துறையினரின் அணிவகுப்பு மரியாதையை ஏற்றுக்கொண்டார்.

முன்னதாக சுதந்திர தினவிழாவையொட்டி மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் காலை 8.40 மணிக்கு காந்தி மார்க்கெட் அருகில் உள்ள போர் நினைவுச் சின்னத்தில் மலர் வளையம் வைத்து மரியாதை செலுத்தினார்கள்.

தொடர்ந்து நாட்டின் விடுதலைக்காக பாடுபட்ட 10 தியாகிகளுக்கு மற்றும் அவர்களது குடும்பத்தினர்களின் வீடுகளுக்கே சென்று பொன்னாடை அணிவித்து நினைவு பரிசுகளையும் வழங்கி கௌரவிக்கப்பட்டது.

இந்நிகழ்ச்சியில் திருச்சிராப்பள்ளி மத்திய மண்டலம் காவல்துறை தலைவர் திரு.H.M.ஜெயராமன்.இ.கா.ப., அவர்கள், மாநகர காவல் ஆணையர் திரு.J.லோகநாதன்.இ.கா.ப., அவர்கள், திருச்சிராப்பள்ளி சரக காவல்துறை துணைத்தலைவர் திருமதி.Z.ஆணிவிஜயா.இ.கா.ப., அவர்கள், மாவட்ட காவல் கண்காணிப்பாளர் திரு.T.ஜெயசந்திரன்.இ.கா.ப., அவர்கள், திருச்சி மாநகர காவல் துணை ஆணையர்கள் திரு.அல்லாட்டி பள்ளி பவன்குமார் ரெட்டி.இ.கா.ப., (சட்டம் மற்றும் ஒழுங்கு) அவர்கள், திருச்சி திரு.சு.வேதரத்தினம் (குற்றம் மற்றும் போக்குவரத்து), மாவட்ட வருவர் அலுவலர் திரு.பழனிகுமார், ஆட்சியர்(பயிற்சி) திருமதி.சித்ராவிஜயன்,இ.ஆ.ப., திருச்சிராப்பள்ளி வருவாய் கோட்டாட்சியர் திரு.எஸ்.விஸ்வநாதன், மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (பொது)(பொ) திருமதி.பழனிதேவி, கூடுதல் காவல் கண்காணிப்பாளர் திரு.A.சந்திரன் அவர்கள், காவல் துணைக் கண்காணிப்பாளர் திரு.M.முகமது ர.ஃபி அவர்கள், மாவட்ட வழங்கல் அலுவலர் திரு.க.அன்பழகன், தாட்கோ மேலாளர் திரு.தியாகராஜன், அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனை

முதல்வா் டாக்டா்.வனிதா, இணை இயக்குநா்(குடும்பநலம்) டாக்டா்.லெட்சுமி, துணை இயக்குநா் (சுகாதாரப்பணிகள்) டாக்டா்.சுப்ரமணி, துணை இயக்குநா்கள் டாக்டா்.பிரியதா்ஷினி (மருத்துவம் மற்றும் குடும்பநலம்), டாக்டா்.சாந்தி (தொழுநோய்), டாக்டா்.சாவித்திரி(காசநோய்), மாநகராட்சி நகா்நல அலுவலா் டாக்டா்.யாழினி, மாவட்ட எய்ட்ஸ் கட்டுப்பாட்டு அலுவலா் டாக்டா்.மாா்டின், மாவட்ட கொள்ளை நோய் தடுப்பு அலுவலா் டாக்டா்.அரவிந்தன், அலுவலக மேலாளா் (குற்றவியல்) திரு.சிவசுப்ரமணியம்பிள்ளை, தனி வட்டாட்சியா் கூடுதல் வரவேற்பு திரு.சண்முகவேலன் திருச்சிராப்பள்ளி வட்டாட்சியா்கள் திரு.முகுந்தன்(மேற்கு), திரு.ஸ்ரீதா்(ஸ்ரீரங்கம்), மற்றும் அனைத்து துறை அலுவலா்கள், பொதுமக்கள் அனைவரும் சுதந்திர தின விழாவில் கலந்து கொண்டு சிறப்பித்தனா்.

**வெளியீடு :**

**செய்தி மக்கள் தொடா்பு அலுவலா்,**
**திருச்சிராப்பள்ளி.**